**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

01.07.2025

O.S. No. 342/2023

P.W.1 திரு.ரமேஷ்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

இந்த வழக்கின் முழு விவரங்களும் எனக்கு தொியாது என்றால் சரியல்ல, தொியும். தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சியரை கட்சியாக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 2 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் கூட்டுச் சேர்ந்து பட்டிகை சொத்தை அபகரிக்க முயற்சிப்பதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3 ஆவணம் ஆரோ மீரா பயோ சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் ஆவண எண். 1507/2008 என்ற கிரய ஆவணம் மூலம் கிரயம் பெற்று அதை IDBI வங்கியில் கடன் பெறுவதற்காக 25.07.2012 ஆம் தேதி தோவாளை சார் பதிவாளர் அலுவலக ஆவண எண். 852/2014 படி அடமானமாக பதிவு செய்து அதன் பேரில் மேற்படி நிறுவனம் கடனை திரும்ப செலுத்ததால் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகளால் Sarfesi சட்டம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நாகர்கோவில் தலைமை குற்றவியல் நடுவவர் நீதிமன்றத்தின் ஆணைப் பெற்று தாவா சொத்து மற்றும் கூடுதல் சொத்தை 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் சுவாதீனம் எடுத்துள்ளார்கள் என்றால் இருக்கலாம், ஆனால்

எங்களுடைய சொத்தையும் சேர்த்து எடுக்க வந்ததால்தான் வழக்கு தாக்கல் செய்தோம். அவ்வாறு 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் தவறான சொத்தை சுவாதீனம் எடுக்க வந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நாகர்கோவில் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றுவதற்காகதான் வழக்கறிஞர் ஆணையர் பட்டிகை சொத்திற்கு வந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பதற்கான கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.